**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 152/2019 |
| Name | : Satheeshkumar |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொக்கரக்கல் வலசில் வசித்து வருகிறேன். பால் சொசைட்டியில் வேலை செய்கிறேன். வழக்கமாக நான் மாரிமுத்துவின் தோட்டத்திற்கு பால் கறக்க செல்லும் போது மாரிமுத்துவிற்கு அடிப்பட்டதாக சொன்னார்கள். 2018ம் வருடம் 10 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை காலை 07.30 மணிக்கு போலீசார் மாரிமுத்துவின் தோட்டத்தில் வைத்து விசாரித்து வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் மாரிமுத்துவின் தங்கை அமுதவள்ளியும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் இரண்டாவதாக ஒரு கையொப்பம் பெற்றார்கள். எதற்கு என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் 14.10.2018ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த சம்பத்திற்கு பயன்படுத்திய மரக் கட்டை ஒன்றை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக இருந்து நானும், அமுதவள்ளியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்